# 4-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

**முன்னிலை : திரு.M.நம்பிராஜன்.,பி.ஏ,பி.எல்.,**
**4-வது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**உடுமலைப்பேட்டை**

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17– ம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2055, விசுவாவசு வருடம் புரட்டாசி திங்கள் 31–ம் நாள்
IA.No.3/2025
in
O.S.No.493/2021

K. மாலதி ........ மனுதாரர்/ பிரதிவாதி

//எதிர்//

C. ஜெகஜோதி .......... எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனு என் முன்னர் 24.09.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.C.பிரேம்குமார், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் திரு.C.ஜெகஜோதி, அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரீசிலித்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>உத்தரவு</u>

மனுதாரர், அசல் வழக்கில் கூடுதல் விவரப்பத்திரிக்கையை கோப்பிற்கு எடுத்துக்கொள்ள உத்தரவிட கேட்டு, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 9, பிரிவு 151–ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–</u>

**2.1)** மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி, வழக்கு விவரங்கள் எனக்கு நேரில் தெரியும். இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் விவரப்பத்திரிக்கையை இம்மனுவின் ஓர் பாகமாக கருத வேண்டும், எதிர்மனுதாரர் மனுதாரர்மீது 14.10.2019–ம் தேதிய காசோலை அடிப்படையில் தொகை வசூல் செய்து தரக்கோரி மேற்படி காசோலை அடிப்படையில் உடுமலைப்பேட்டை

குற்றவியல் நீதிமன்றம் எண்.1–ல் STC.No.701/2019 என்ற எண்ணில் காசோல மோசடி வழக்கு தாக்கல் செய்திருந்தார். உடுமலைப்பேட்டை குற்றவியல் நீதிமன்ற நடுவர் எண்.1–ல் கடந்த 17.11.2022–ம் தேதியில் நடைபெற்ற மக்கள் நீதிமன்றத்தில் அசல் வழக்கில் சொல்லப்பட்டுள்ள காசோலைக்குரிய அசல், வட்டி செலவு தொகைகளுக்காக ரூ.9,00,000/–மனுதாரரால் எதிர்மனுதாரருக்கு செலுத்தப்பட்டு STC.No.701/2019 எண்ணானது முடித்து வைக்கப்பட்டது. அப்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள தாவாவினை வாபஸ் பெற்றுக்கொள்ளுவதாக எதிர்மனுதாரர் உறுதியளித்து இருந்தார்.

**2.2)** ஆனால், எதிர்மனுதாரர் தற்போது காசோலைக்குரிய வட்டித் தொகைகள் மனுதாரர் செலுத்த வேண்டுமென்று மோசடியாக வழக்கு நடத்தி வருகிறார். அசல் வழக்கில் மனுதாரர் விவரப்பத்திரிக்கை தாக்கல் செய்து அதில் நஷ்ட ஈட்டு தொகை ரூ.10,10,000/– மனுதாரருக்கு செலுத்த வேண்டுமென்று எதிர் பாத்தியம் கோரியுள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்பாத்திய உரைக்கு, எதிர்மனுதாரர் பதில் உரை தாக்கல் செய்துள்ளார். அதில் மனுதாரர் 16.11.2022–ம் தேதியில் ரூ.8,25,000/– மட்டுமே கொடுத்ததாகவும், மீதி தொகை ரூ.75,000/–ஐ மனுதாரர் 22.11.2022–ம் தேதியில் 12.49 PM மணிக்கு எதிர்மானுதாரரின் வங்கி கணக்கில் செலுத்தியதாகவும், வங்கி கணக்கில் செலுத்திய விவரத்தை மனுதாரரும், மனுதாரரின் அப்போதைய வழக்கறிஞர் M.சிக்கந்தர் பாஷாவும் நீதிபதியிடம் மறைத்துவிட்டதாகவும் கூறியுள்ளார். மேலும், எதிர்மனுதாரர்/வாதியை வா.சா–1 ஆக 08.04.2025–ம் தேதியில் விசாரித்த போது வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.16 ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். வா.சா.ஆ.10 ஆனது 22.11.2022–ம் தேதியில் ரூ.75,000/– பணம் பெற்றதற்கான ரசீது என்றும், வா.சா.ஆ.11 ஆனது 22.11.2022–ம் தேதியிட்ட 12.49 AM VK–CBSSBI ரசீது என்றும், வா.சா.ஆ.16 ஆனது 14.02.2022–ம் தேதியிட்ட தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட வங்கி சலான் மற்றும் மனுதாரரின் ஸ்டேட்மெண்ட் ஆப்அக்கவுண்டஸ் ஆகியவைகளை தாக்கல் செய்துள்ளார்.

**2.3)** ஆகவே வழக்கு கோப்புகளை பார்வையிட 23.04.2025–ம் தேதியில் நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்தார். அந்த குறிப்பாணையில் வழக்கு கோப்புகளை பார்வையிட மனுதாரருக்கு அனுமதி அளித்து நீதிமன்றம் உத்திரவிட்ட பின்பு, 05.06.2025–தேதியில் வழக்கு வழக்கறிஞருடன் சேர்ந்து பார்வையிட்டார். வழக்கு கோப்புகளை பார்வையிட்ட போது வா.சா.ஆ.16 ஆவணம் குறித்து அசல் வழக்கில் மனுதாரர் கூடுதல் விவரப்பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. மேலும், வழக்கு கோப்புகளை பார்வையிடும் போது எதிர்மனுதாரர் மனுதாரர் வழக்கறிஞர் மீதும் STC.No.701/2019 வழக்கை நடத்தி வந்த M.சிக்கந்தர் பாஷா மீதும் நடவடிக்கை எடுக்க சொல்லி சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களுக்கு 03.06.2024–ம் தேதியில் குறை தீர்க்கும் புகார் மனு என்ற பெயரில் புகார் மனு அனுப்பியுள்ளது தெரிய வந்தது. மேற்படி குறை தீர்க்கும் புகார் மனுவின் சான்று நகலானது 23.07.2025–ம் தேதியில் தான் மனுதாரருக்கு கிடைக்கப்பெற்றது. ஆகவே மேற்படி புகார் மனு குறித்தும் மனுதாரர் கூடுதல் விவரப்பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. கூடுதல் விவரப்பத்திரிக்கை தாக்கல் செய்யும் போது தான் மனுதாரர் மேற்படி சங்கதிகள் குறித்து மனுதாரர் தரப்பு சாட்சியம் அளிக்க இயலும். மனுதாரர் இம்மனுவுடன் அவரது தரப்பு கூடுதல் விவரப்பத்திரிக்கையும் தாக்கல் செய்துள்ளார். மேற்படி கூடுதல் விவரப்பத்திரிக்கையை கோப்பிற்கு எடுக்க அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளார். இம்மனு அனுமதிக்காத பட்சம் மனுதாரர் பணத்தாலும், பொருளாலும் ஈடு செய்ய இயலாத அதிக கஷ்ட, நஷ்டம் அடைய நேரிடும். எனவே, மனுவை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டு இந்த மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் உரையின் சுருக்கம்:</u>

**3.1)** மனுதாரர் / பிரதிவாதி, பொய்யான சங்கதிகளைக் கூறி மேற்படி இடை மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி இடை மனுவில் கண்ட சங்கதிகளையும், மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள அபிடவிட்டில் கண்ட சங்கதிகளையும், கூடுதல் விவரப்பத்திரிக்கையில் கண்ட சங்கதிகளையும் முழுமையாக மறுத்து, மேற்படி இடை மனுவை அனுமதிக்கூடாது எனக் கூறி

எதிர்மனுதாரர்/வாதி தரப்பு ஆட்சேபனையை தெரிவிக்கிறார். மேற்படி மனுதாரர் /பிரதிவாதி கடந்த 07.07.2019 ம் தேதியன்று மாதம் ஒன்றிற்கு ரூ.100/−க்கு ரூ.1/− வீதம் வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு ரூ.9,00,000/− த்தை எதிர்மனுதாரர் /வாதியிடம் கடனாகப் பெற்றுள்ளார்.

**3.2)** கடந்த 13.10.2019 ம் தேதியன்று எதிர்மனுதாரர் / வாதியை சந்தித்து மூன்று மாதத்திற்கான வட்டியை மட்டும் கொடுத்துவிட்டு, அசல் தொகை ரூ.9,00,000/− த்தை திருப்பிக் கொடுப்பதற்காக, உடுமலைப்பேட்டை State Bank of India வங்கி காசோலை எண்.933127 −ஐ 14.10.2019 ம் தேதியிட்டு முழுவதுமாக பூர்த்தி செய்து எதிர்மனுதாரர் / வாதியின் பெயருக்கு கொடுத்துள்ளார். மேற்படி காசோலையை வசூலுக்கு எதிர்மனுதாரர் தாக்கல் செய்த போது மனுதாரர் / பிரதிவாதியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை எனக் காரணங்கள் கூறி திருப்பி வந்துள்ளது. மேற்படி காசோலை திருப்பப்பட்ட விபரத்தை கூறி காசோலை தொகையை தரும்படியும் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பை எதிர்மனுதாரர் / வாதி 16.10.2019 ம் தேதி மனுதாரர் / பிரதிவாதி அலுவலக முகவரிக்கும், வீட்டு முகவரிக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி அதனை மனுதாரர் / பிரதிவாதி 22.10.2019 ம் தேதி பெற்றுக்கொண்டு அதற்கு எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பாமலும் காசோலைத் தொகையை செலுத்தாமலும் இருந்து வந்துள்ளார். மேற்படி பணம் வசூலாகாமல் திருப்பப்பட்ட காசோலையை வைத்து எதிர்மனுதாரர் / வாதி உடுமலைப்பேட்டை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.1 ல் STC No.701/2019 என்ற காசோலை மோசடி வழக்கை மனுதாரர் / பிரதிவாதி மீது தாக்கல் செய்திருந்தார். மேலும் மேற்படி காசோலைக்குண்டான அசல் தொகை ரூ.9,00,000/−த்தையும், காசோலை தேதியான 14.10.2019 தேதிமுதல் காசோலைத்தொகை செலுத்தப்படும் தேதிவரையிலான வட்டித்தொகையையும், வழக்குச் செலவுத்தொகையையும், வசூல் செய்யும் பொருட்டு O.S.No.493/2021 வழக்கை இந்த நீதிமன்றத்தில் எதிர் மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ளார்.

**3.3)** இந்நிலையில் கடந்த 12.11.2022 தேதியில் மனுதாரர் /பிரதிவாதி கடன் தொகையான காசோலை தொகை ரூ.9,00,000/−த்தை தந்து விடுகிறேன் எனவும்,

காசோலை மோசடி வழக்கான S.T.C.No.701/2019 ஐ சமரசமாக முடித்துக் கொள்ளலாம் எனவும், அதற்கு பின்னிட்டு காசோலை தேதியான 14.10.2019 ம் தேதி முதல் 12.11.2022 ம் தேதி வரையிலான வட்டியை தந்து விடுகிறேன் எனவும், அதற்கு பின்பு O.S.No.493 / 2021 வழக்கையும் சமரசமாக முடித்துக்கொள்ளலாம் என எதிர்மனுதாரர் / வாதியிடம் உறுதி அளித்திருந்தார். கடந்த 16.11.2022 ம் தேதியில் ரூ.8,25,000/- த்தை மட்டும் மனுதாரர் /பிரதிவாதி, எதிர்மனுதாரருக்கு செட்டில் செய்து விட்டு மீதமுள்ள ரூ.75,000/-த்தை அன்றே தந்து விடுவதாக உறுதி கூறியபடியினால், மேற்படி காசோலை மோசடி வழக்கை சமரசமாக முடித்துக்கொள்ளலாம் என்ற நல்ல எண்ணத்தில் 16.11.2022-ம் தேதியிட்ட இரசீதில் எதிர்மனுதாரர் / வாதி கையொப்பம் செய்து கொடுத்துள்ளார்.

**3.4)** ஆனால் மனுதாரர்/ பிரதிவாதி, தான் ஒப்புக்கொண்டபடி 16.11.2022-ம் தேதியில் மீதமுள்ள ரூ.75,000/-த்தை எதிர்மனுதாரர் / வாதிக்கு கொடுக்கவில்லை. மேற்படி 16.11.2022-ம் தேதியிட்ட இரசீது இந்த வழக்கில் (O.S.No.493/2021) வா.சா.ஆ.9 ஆகவும், பி.சா.ஆ.3 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 16.11.2022 ம் தேதியிட்ட இரசீதில் கடன் தொகை ரூபாய் 9,00,000/-(ரூபாய் ஒன்பது லட்சத்தை) பெற்றுக்கொண்டதற்கான இரசீது இதுவே ஆகும் என மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி இரசீதில் காசோலை தேதியான 14.10.2019 ம் தேதி முதல் வட்டி தொகை செலுத்தப்பட்டதாகவோ, வழக்குக்கான செலவுத்தொகை கொடுக்கப்பட்டதாகவோ குறிப்பிடப்படவில்லை. கடந்த 22.11.2022 , STC No.701/2019 வழக்கை சமரசமாக முடித்துக்கொண்டது போலவே, இந்த நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள O.S.No.493 / 2021 வழக்கையும் சமரசமாக முடித்துக்கொள்ளலாம் என மனுதாரர் / பிரதிவாதி தெரிவித்திருந்தார். மேலும் அசல் தொகையான ரூ.9,00,000/-த்தில் 16.11.2022-ம் தேதியில் நிலுவையிலிருந்து வந்த ரூ.75,000/-த்தையும், காசோலை தேதியான 14.10.2019 ம் தேதி முதல் 12.11.2022 ம் தேதிவரையிலான வட்டித்தொகையையும் எதிர்மனுதாரர் / வாதியின் வங்கி கணக்கில் செலுத்தி விடுவதாகக் கூறி, வங்கி கணக்கு எண் விபரங்களையும் கேட்டு பெற்றுள்ளார். மேலும் வங்கி கணக்கில் பணம் செலுத்தப்பட்ட பின்னர் சாட்சியாக ஒரு நபரை அழைத்து வந்து சாட்சி

கையொப்பமிட்டு தர வேண்டும் எனக்கூறி உறுதிமொழி ஆவணத்தை காண்பித்துள்ளார்.

**3.5)** மேலும் O.S.No.493 /2021 வழக்கை சமரசமாக முடிப்பதற்கு தனியே இரசீது கொடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். தற்போது நாம் பேசிக்கொண்டதற்கு ஆதாரமாக இந்த உறுதி மொழி ஆவணத்தில் நீங்கள் மட்டும் கையொப்பம் செய்து கொடுங்கள், பின்னர் சாட்சி கையொப்பங்களை பெற்றுக்கொள்ளலாம் எனக்கூறி எதிர்மனுதாரர் / வாதியிடம் உறுதிமொழி ஆவணத்தில் கையொப்பம் பெற்றுக்கொண்டுள்ளார். மேற்படி சாட்சிகளின் கையொப்பமில்லாத 22.11.2022 ம் தேதியிட்ட உறுதிமொழி ஆவணத்தின் சான்று நகல் இந்த வழக்கில் (O.S.No.493 /2021) வா.சா.ஆ.13 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 22.11.2022 ம் தேதியிட்ட அசல் உறுதிமொழி ஆவணம் பி.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாட்சிகளின் கையொப்பமில்லாத 22.11.2022 ம் தேதியிட்ட உறுதிமொழி ஆவணத்தில் சாட்சிகளின் கையொப்பங்களை பூர்த்தி செய்து மனுதாரர்/ பிரதிவாதி தவறாக பயன்படுத்தி விடக்கூடாது என்ற நோக்கத்தில்தான் உறுதிமொழி ஆவணத்தின் சான்று நகலை வா.சா.ஆ.13 ஆக இந்த வழக்கில் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ளார். மேற்படி 16.11.2022 ம் தேதியில் அசல் தொகையான ரூ.9,00,000/–த்தில் நிலுவையில் இருந்த தொகை ரூ.75,000/–த்தை மனுதாரர் /பிரதிவாதி 22.11.2022 ம் தேதியில், உடுமலைப்பேட்டை State Bank of India வங்கியில் உள்ள எதிர்மனுதாரர் / வாதியின் வங்கி கணக்கு எண். 11046975111–ல் Cash Deposit Challan– ஐ நிரப்பி மனுதாரர்/ பிரதிவாதி தனது கையொப்பமிட்டு செலுத்தியுள்ளார். மேற்படி 22.11.2022–ம் தேதியிட்ட வங்கி சலான் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் எதிர்மனுதாரர் / வாதியால் பெறப்பட்டு இந்த வழக்கில் (O.S.No.493 / 2021 ) வா.சா.ஆ.16 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி காசோலை தேதியான 14.10.2019 ம் தேதி முதல் 12.11.2022 ம் தேதி வரையிலான வட்டித்தொகையையும், OS 4931/2021 செலவுத் தொகையையும், மனுதாரர் / பிரதிவாதி இதுவரைக்கும், வழக்கு எதிர்மனுதாரர் / வாதிக்கு செலுத்தவில்லை. மேற்படி சங்கதிகளை நிரூபிப்பதற்கான ஆவணங்கள் எதையும் இந்த வழக்கில்

மனுதாரர் / பிரதிவாதி தாக்கல் செய்யவுமில்லை. மேற்படி உண்மைகளை மறைத்து காசோலைக்குண்டான தொகையும் வட்டித் தொகையும், வழக்கு செலவிற்கான தொகையும் எதிர்மனுதாரர்தி / வாதிக்கு செலுத்திவிட்டதாக மனுதாரர் /பிரதிவாதி அபிடவிட்டின் 3 வது பாராவில் கூறியுள்ளது பொய்யான தகவலாகும்.

**3.6)** மேலும் மேற்படி உண்மைகளை மறைத்து, மனுதாரர்/ பிரதிவாதி தனது கூடுதல் விவரப்பத்திரிக்கையின் 4 வது பாராவில் தனது தம்பி K.மணிகண்டன் எதிர்மனுதாரர்தி / வாதியிடம் பெற்றுக்கொண்ட கடனை திருப்பிச் செலுத்துவதற்காக, ரூ.75,000/– த்தை மனுதாரர் /பிரதிவாதி 22.11.2022 ம் தேதியில் எதிர்மனுதாரர்/வாதியின் வங்கி கணக்கில் செலுத்தியதாக புதுக்கதையை தெரிவித்து பொய்யான தகவல்களை குறிப்பிட்டுள்ளார். மேற்படி சங்கதிகளை ஆவண சாட்சியங்களைக் கொண்டு மனுதாரர் / பிரதிவாதி தான் நிரூபிக்கவேண்டும். உண்மையில் மேற்படி K.மணிகண்டன் அவர்களுக்கும் இந்த எதிர் மனுதாரருக்கும் எவ்வித வரவு செலவும் இல்லை. இந்த எதிர்மனுதாரர் மேற்படி K.மணிகண்டன் அவர்களிடம் பணம் எதுவும் கொடுக்கவில்லை. மேற்படி K.மணிகண்டன் அவர்களும் இந்த எதிர்மனுதாரரிடம் கடன் பெறவில்லை. மனுதாரர் மேற்படி இடை மனுவில் சொல்லியுள்ள K.மணிகண்டன் பற்றி கூறிய சங்கதிகள் உண்மையாக இருந்திருக்கும் பட்சத்தில், மனுதாரர் தரப்பில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள விபரப்பத்திரிக்கையில் மேற்படி சங்கதிகளை கண்டிப்பாக தெரிவித்திருப்பார். மனுதாரர் வேண்டு மென்றே பின் யோசனையிட்டு மேற்படி பொய்யான சங்கதிகளாக இந்த மனுவில் தெரிவித்துள்ளார். எனவே மனுதாரர் சொல்லியுள்ள மேற்படி சங்கதிகள் பொய் என்பது இதன் மூலம் நிரூபணமாகிறது. எனவே மனு தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதைக் காண்பதேயாகும்.**

**5. தீர்வு:–**

**5.1)** மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், மனுதாரர் அசல் வழககில் பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர் வாதி என்றும், எதிர்மனுதாரர்

காசோலை தொகையை வட்டியுடன் திரும்பச் செலுத்தக் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலை தொகைக்காக எதிர்மனுதாரர் உடுமலைப்பேட்டை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.1ல் STC.No.701/2019 என்ற குற்ற வழக்கையும் தாக்கல் செய்திருந்தார் என்றும், கடந்த 17.11.2022-ம் தேதியன்று நடைபெற்ற மக்கள் நீதிமன்றத்தில் மேற்படி குற்ற வழக்கு சம்பந்தமாக ஒரு சமரசம் ஏற்பட்டு மனுதாரர் எதிர்மனுதாரருக்கு காசேலையில் குறிப்பிட்டுள்ள அசல், வட்டி ஆகியவற்றை சேர்த்து ரூ.9,00,000/-த்தை செலுத்தியுள்ளார் என்றும், அப்போது இந்த அசல் வழக்கையும் வாபஸ் பெற்றுக்கொள்வதாக எதிர்மனுதாரர் உறுதி அளித்தார் என்றும், அதனடிப்படையில் மேற்படி குற்ற வழக்கு STC.No.701/2019 முடித்து வைக்கப்பட்டது என்றும், ஆனால் எதிர்மனுதாரர் காசோலைக்கு உரிய வட்டித் தொகைகளை மனுதாரர் செலுத்த வேண்டும் என்று மோசடியாக தொடர்ந்து இந்த அசல் வழக்கை நடத்தி வருகிறார் என்றும், மனுதாரர் எதிர்மனுதாரர்மீது எதிர் பாத்தியம் கோரி அதாவது ரூ.1,10,000/- எதிர்மனுதாரர் தனக்கு நஷ்ட ஈடாக தர வேண்டும் என்று எதிர் வழககுரை தாக்கல் செய்துள்ளார் என்றும், அதற்கு எதிர்மனுதாரர் பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்றும், அதில் மேற்படி STC.No.701/2019 வழக்கை சமரசம் செய்தபோது ரூ.8,25,000/-த்தை மட்டும் தான் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு வழங்கியதாகவும், மீதி தொகை ரூ.75,000/-த்தை 22.11.2022 அன்று எதிர்மனுதாரரின் வங்கிக்கணக்கில் மனுதாரர் செலுத்தியதாகவும், மேற்படி விவரத்தை மனுதாரரும் அவருடைய வழக்கறிஞரும் நீதிபதியிடம் மறைத்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், எதிர்மனுதாரர் அசல் வழககில் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டபோது வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.16 ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்றும், வா.சா.ஆ.10 ஆனது மனுதாரர் 22.11.2022-ம் தேதி ரூ.75,000/-த்தை செலுத்தியதற்கான இரசீது என்றும், வா.சா.ஆ.11 ஆனது மேற்படி தேதியில் VJCBSSBI ரசீது என்றும், வா.சா.ஆ.16 ஆனது 14.02.2022-ம் தேதியன்று எதிர் மனுதாரர் தகவலறியும் சட்டத்தின்கீழ் பெற்ற வங்கி சலான் மற்றும் அவருடைய Statement of Account என்றும் தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்

வழக்காவணங்களை வழக்கறிஞருடன் நன்கு பரிசீலனை செய்த போது, எதிர்மனுதாரர் மனுதாரரின் வழக்கறிஞரின்மீது குற்ற வழக்கை நடத்திய வழக்கறிஞர் என்றும், 03.06.2024 ல் சென்னை உயர்நீதிமன்ற தலைமை வழக்கறிஞருக்கு புகார் அனுப்பிய விவரம் தெரிய வந்தது என்றும், எனவே, அது குறித்தும் எதிர்மனுதாரர் தாக்கல்செய்துள்ள அவர் தரப்பு வழக்காவணங்கள் குறித்தும் கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் உள்ளதால் மனுதாரர் கூடுதல் எதிர் வழக்குரையை தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று வாதிட்டார்.

**5.2)** எதிர்மனுதாரர் வாதிடுகையில், மனுதாரர் எதிர்மனுதாரரிடம் கடந்த 07.07.2019 அன்று ரூ.9,00,000/- கடன் வாங்கினார் என்றும், அதற்கு மாதம் ரூ.100/-க்கு 1% வட்டி தருவதாக ஒப்புக்கொண்டார் என்றும், ஆனால் ஒப்புக்கொண்டபடி பின்னாளில் வட்டி தராததால் எதிர்மனுதாரர் மனுதாரரை சந்தித்து கேட்டபோது, அசல் தொகை ரூ.9,00,000/-த்திற்கு மட்டும் மனுதாரர் அவர் வங்கி காசோலையை எதிர்மனுதாரருக்கு கொடுத்தார் என்றும், அதை எதிர்மனுதாரர் வசூலுக்கு தாக்கல் செய்தபோது, மனுதாரர் வங்கிக் கணக்கில் போதிய பணம் இல்லாமல் இருந்ததால் காசோலை திருப்பப்பட்டது என்றும், அதனடிப்படையில் காசோலை மோசடி வழக்கை உடுமலைப்பேட்டை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 ல் தாக்கல் செய்தார் என்றும், அதனுடைய எண். STC.No.701/2019 என்றும் அதுபோல் காசோலை தொகையை வட்டியுடன் திரும்பச் செலுத்த வேண்டும் என்று எதிர்மனுதாரர் மனுதாரருககு எதிராக இந்த அசல் வழக்கை தாக்கல் செய்தார் என்றும், மனுதாரர் எதிர்மனுதாரரிடம் காசோலை தொகையை தந்து விடுகிறேன் என்றும், முதலில் காசோலை மோசடி வழக்கை முடித்துக் கொள்ளலாம் என்றும், பின்னிட்டு மேற்படி காசோலைக்கான வட்டியை தந்து விடுவதாகவும், அதன் பின்பு அசல் வழக்கை முடித்துக்கொள்ளலாம் என்று தெரிவித்தார் என்றும், கடந்த 16.11.2022 ம் தேதியன்று மனுதாரர் எதிர்மனுதாரரிடம் ரூ.8,25,000/-த்தை மட்டும் கொடுத்துவிட்டு மீதி தொகை ரூ.75,000/-த்தை தந்து விடுவதாகவும் உறுதியளித்ததால் நல்லெண்ணத்தின் அடிப்படையில் எதிர்மனுதாரர் ரசீதில் கையொப்பம் இட்டுக் கொடுத்தார் என்றும், ஆனால்

ஒப்புக்கொண்டபடி மனுதாரர் மீதி தொகை ரூ.75,000/-த்தை 16.11.2022-ம் தேதியன்று எதிர்மனுதாரருக்கு கொடுக்கவில்லை என்றும், பின்னிட்டு கடந்த 22.11.2022-ம் தேதியன்று மனுதாரர் எதிர்மனுதாரரின் வங்கிக் கணக்கில் ரூ.75,000/-த்தை செலுத்திவிட்டார் என்றும், மேற்படி விவரத்தை மனுதாரர் தகவலறியும் சட்டத்தின்கீழ் பெற்று அசல் வழக்கு விசாரணையில் வா.சா.ஆ.16 ஆக தாக்கல் செய்துள்ளார். ஆனால் மேற்படி காசோலை தொகைக்கான வட்டியை மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலுத்தவில்லை என்றும், மனுதாரர் கூடுதல் எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள மணிகண்டனுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை, மேற்படி மணிகண்டனுக்கு எதிர்மனுதாரர் கடன் கொடுக்கவும் இல்லை, கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்கள் பொய்யானவை, மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**5.3)** நீதிமன்றம் இருதரப்பு வாதங்களையும் சாட்சிகளையும், ஆவணங்களையும் நன்கு பரிசீலனை செய்கையில் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக காசோலை தொகையை வட்டியுடன் திரும்பக்கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியவந்துள்ளது. மேலும், எதிர்மனுதாரர் காசோலை மோசடி வழக்கு உடுமலைப்பேட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1ல் STC.No.701/2019 தாக்கல் செய்திருந்த விவரமும் தெரியவந்துள்ளது. மேற்படி விவரத்தை இருதரப்பிலும் மறுக்கவில்லை, மேற்படி காசோலை மோசடி வழக்கு சம்பந்தமாக மனுதாரரும் எதிர்மனுதாரரும் மக்கள் நீதிமன்றத்தில் சமரசம் ஏற்பட்டு ரூ.9,00,000/- மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலுத்தி சமரசமாக முடிக்கப் பட்டதாகவும் அதில் ரூ.8,25,000/-த்தை மட்டும்தான் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலுத்தியதாகவும் மீதி தொகை ரூ.75,000/-த்தை வங்கி மூலமாக எதிர்மனுதாரருக்கு செலுத்தியதாகவும், மேற்படி விவரத்தை நடுவர் நீதிமன்றத்தில் மனுதாரரும் அவருடைய வழக்கறிஞரும் மறைத்துவிட்டதாகவும், reply statement ல் மனுதாரர் தெரிவித்துள்ள விவரம் தெரியவந்துள்ளது. மேற்படி எதிர்மனுதாரரின் reply statement ல் உள்ள வாதுரை சம்பந்தமாக மனுதாரர் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், வாதி/எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் வ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு

குறுக்குவிசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலை உள்ள விவரம் தெரிய வந்துள்ளது. மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையை மனுதாரர் தாக்கல்செய்வதால் எதிர்மனுதாரர் வழக்கிற்கு ஈடுசெய்யமுடியாத இழப்பு ஏற்படும் என்றோ, எதிர்மனுதாரர் இந்த எதிருரையில் தெரிவிக்கவில்லை. இந்த மனுவை அனுமதிப்பதால் வழக்கு விசாரணை போக்கு மாறாது என்று இந்நீதிமன்றம் கருதுவதால் நீதியின் நலனை கருத்தில் கொண்டு கூடுதல் எதிர்வழக்குரையை மனுதாரர் தாக்கல் செய்வதற்கு இந்நீதிமன்றம் அனுமதிக்கிறது.

**முடிவாக,**

மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை பற்றிய உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

M NAMBIRAJAN Digitally signed by M NAMBIRAJAN Date: 2025.10.17 19:08:16 +0530

4-வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை

**<u>மனுதாரர்தரப்பிலும் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள்:- இல்லை</u>**

**<u>எதிர்மனுதாரர்கள்தரப்பிலும் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள்:- இல்லை</u>**

M NAMBIRAJAN Digitally signed by M NAMBIRAJAN Date: 2025.10.17 19:08:23 +0530

4-வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை

FAIR/DRAFT ORDER
In
IA.No.3/2025
in
OS.No.493/2021
Date: 17.10.2025
IV$^{th}$ ADJ Udt